ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

10 ஜுலை 2021

கலாநிதி அசேல குணவர்தண,
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
சுகாதார சேவைகள் திணைக்களம்,
கொழும்பு 10.

திரு. சந்தன விக்கிரமரத்ன,
பொலிஸ்மா அதிபர்,
பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01

**அமைதியான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற நபர்களது கைதும் தனிமைப்படுத்தல்களும்**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது (இசச) கொவிட்-19 சுகாதார ஒழுங்குமுறைகளை மீறியமைக்காக இலங்கை காவல்துறையினரால் (பொலிசாரால்) கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்து தனது ஆழ்ந்த கரிசனத்தை வெளியிடுகிறது.

இக்கைதுகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பொலிசாருக்கு அனுப்பப்பட்ட DDG(PHS)1/D02/7/13/2017/20 எனும் இலக்கம் கொண்ட கடித சாராம்சத்தினை கொண்டு நடத்தும் முகமாக பொலிஸ் ஊடக பிரிவினால் வெளியிடப்பட்ட PMD/PR/845/21 எனும் 06-07-2021 ஆம் திகதிய ஊடக அறிக்கையினை தொடர்ந்து இடம்பெற்றுள்ளன. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் மேற்குறிப்பிடப்பட்ட கடிதம் வெளியிடப்பட்ட திகதியானது வெளிப்படுத்தப்படவில்லை.

கடந்த சில நாட்களாக இலங்கை காவல்துறையானது பல்வேறு பிரச்சினைகளிற்காக அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட நபர்கள் மீது பல கைது நடவடிக்கைகளை முன்னெடுத்து அவர்களை நீதிமன்றின் முன் நிறுத்தியுள்ளது.

பொது ஆர்ப்பாட்டமானது அரசியலமைப்பின் 14(1)(அ), (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றால் உறுதிப்படுத்தப்பட்ட பேசுவதற்கும் கருத்து வெளியிடுவதற்குமான சுதந்திரம், அமைதியாக ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் மற்றும் ஒன்றுசேர்வதற்கான சுதந்திரம் என்பவற்றை உரித்துடையதாக கொண்டுள்ளது. பொதுமக்களது போராட்டமானது அரசியலமைப்பின் உறுப்புரை 10 இனால் அடிப்படை உரிமையாக குறிக்கப்பெற்ற சிந்தனை சுதந்திரத்தினாலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்புரை 14(1) இன் கீழான உரிமைகள் பொதுச் சுகாதாரத்தின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்படலாம் எனினும் அத்தகைய மட்டுப்படுத்தல்கள் சட்டத்தினாலேயே ஆற்றப்படவேண்டும் என்பதுடன் அது அடைய எத்தனிக்கும் நோக்கத்துடன் இணைவுடையதாகவும் நியாயமானதாகவும் காணப்படவேண்டும்.

இசசமானது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட மிக சமீபத்திய சுகாதார வழியுரைப்புக்களை கவனமாக வாசித்தறிந்துள்ளது. மேற்கூறப்பட்ட வழியுரைப்புக்கள் பல உள்ளக மற்றும் வெளியக நடவடிக்கைகளை அனுமதிக்கின்றது. இவை ஸ்பா, திறன் சந்தைகள் மற்றும் உணவகங்கள் மற்றும் *அவற்றுடன் தொடர்புடையவைகளையும்* உள்ளடக்குகின்றது. அவை



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva
No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

மதுபான கடைகளை திறப்பதனை அனுமதிப்பதுடன் வெளிப்புறங்களில் உடற்பயிற்சி மற்றும் ஓட்டப்பயிற்சிகளையும் அனுமதிக்கின்றது இந்த வழிகாட்டுதல்கள் பொது ஆர்ப்பாட்டங்கள் அல்லது வெளிப்புற கூட்டங்களை தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் என்று பட்டியலிடவில்லை.

எவ்வாறாயினும், பொலிஸ் ஊடக பிரிவினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையின் மூலம் கொவிட்-19 பரவும் அபாயத்தின் காரணமாக பொதுமக்கள் ஒன்றுகூடும் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்படக்கூடாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து ஒரு அறிக்கையை பொலிஸ்மா அதிபர் பெற்றதாக ஊடகங்களிற்கு அறிவிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட ஊடக அறிக்கையின் உள்ளடக்கங்களும் மக்களது பாரிய ஒன்றுகூடல் இடம்பெறும் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தவிர்க்க முனையுமாறே அன்றி (මහජනතාව **විශාල වශයෙන්** ඒකරාශී වන) கூட்டம் மற்றும் ஆர்ப்பாட்டங்களை முற்றாக தடைசெய்யுமாறு பரிந்துரைக்கவில்லை என்பது இங்கு குறிப்படத்தக்கதாகும். அவ்வாறே, சுகாதார வழியுரைப்புக்களிற்கு ஒத்திசைவாக முன்னெடுக்கப்படும் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் தடைசெய்யப்படவில்லை.

இசசமானது, எந்தவொரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஆர்ப்பாட்டமும் பொதுச் சுகாதாரத்திற்கு அபாயத்தினை ஏற்படுத்தாது என்பதாகவும் ஆர்ப்பாட்ட பேரணி அல்லது அதனையொத்த செயற்பாடுகளில் பங்கேற்க விரும்பும் நபர்கள், பொது சுகாதாரம் குறித்த அக்கறை மற்றும் தன்னுடைய சொந்த நலனிலான அக்கறையின் பேரில் சுகாதார வழியுரைப்புக்களை உறுதிப்படுத்திக்கொள்ளவும் வேண்டும் எனும் பார்வையை உறுதியாக கொண்டுள்ளது. எவ்வாறாயினும், முன்னாள் அமுல்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளை தளர்த்துவது சரியானது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் எண்ணியிருக்கும் அவ்வேளையில், ஆர்ப்பாட்டக்காரர்களிடம் கடுமையான முறையில் பொலிஸ் செயற்படுவதில் இசசமானது எந்தவொரு நியாயப்பாட்டையும் காணவில்லை.

அத்தகைய நிகழ்வுகளில், அவ் ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்னிலைப்படுத்தப்பட்ட நீதிபதியினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதும், அவர்களது விருப்பத்திற்கு மாறாக, சில சமயங்களில் அவர்கள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றார்கள் என்பதனை அவர்களிற்கோ அல்லது அவர்களது குடும்பத்தினரிற்கோ கூட அறிவிக்காமல் தனிமைப்படுத்தல் நிலையங்களிற்கு பொலிசாரினால் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இசசமானது, இத்தகைய பல நிகழ்வுகளை கவனத்திற்கொண்டுள்ளது என்பதுடன் பிணை வழங்கப்பட்டதன் பின்னர் நீதிமன்ற வளாகத்திற்குள்ளாகவே தனிநபர்கள் வலிந்து கைப்பற்றப்படுவது எவ்வாறானது என்பது குறித்தும் அவர்களது விருப்பத்திற்கு மாறாக தனிமைப்படுத்தலிற்கு அனுப்பப்படுவது எவ்வாறு என்பது குறித்தும் ஆழ்ந்த கவனத்தை கொண்டுள்ளது. அத்தகைய தீர்மானங்கள் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் போன்ற சுகாதார அலுவலர்களினது ஆலோசனையின் அடிப்படையிலானது என்பதற்கு மிக சொற்பமான ஆதாரங்களே காணப்படுகின்றன. தற்போதைய நிலையின்படி, கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் கூட தனிமைப்படுத்தல் நிலையங்களிற்கு அழைத்துச் செல்லப்படுவதனை காட்டிலும் அவர்களது வீடுகளிலும் விடுதிகளிலுமேயே தனிமைப்படுத்தப்படுகின்றனர் எனும் உண்மையையும் இக்கரிசனங்கள் கருத்திற்கொள்கின்றன.

கொவிட்-19 இனிற்கு செல்லுபடியாகுமாறு 5 ஒக்டோபர் 2020 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல. 2197/25 இல் கௌரவ சுகாதார அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைகள் குறித்து தங்களது கவனம் கோரப்படுகின்றது. மேற்கூறப்பட்ட ஒழுங்கு விதிமுறைகளின் ஒழுங்கு விதிமுறை 91 இன்படி:



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
| --- | --- | --- | --- | --- |
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Rajeev Amarasuriya | Rajindh Perera | Pasindu Silva |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

''கொரோனா வைரஸ் நோயுடன் தொடர்புடைய எந்தவொரு தொற்றேற்பட்ட பகுதியிலும் முறையான அதிகாரத்தின்பேரில்

(அ) நபர்களது நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்

(ஆ) நோயுற்ற நபரை அல்லது நோய் ஏற்படக்கூடியவர் என சந்தேகிக்கும் ஒரு நபரை வைத்தியசாலைக்கோ, கண்காணிப்பு நிலையம் அல்லது தனிமைப்படுத்தல் நிலையத்திற்கோ சிகிச்சையிற்காகவோ அல்லது தனிமைப்படுத்தல் நோக்கங்களிற்காவோ கொண்டு செல்ல அல்லது கொண்டு செல்லுமாறு கோருதல்
அல்லது

(இ) முழு இலங்கையிற்குமாக பொருத்தமான அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படும் நோயரும்பு காலத்தை விஞ்சாத காலப்பகுதியிற்கு வீட்டிலோ, வதிவிட வளாகத்திலோ அல்லது இடத்திலோ சுயதனிமைப்படுத்தலில் இருப்பதற்கு நோய் சந்தேக நபர்களை வழிப்படுத்தல்
என்பன சட்டப்பூர்வமானதாகும்.

அத்தகைய தனிமைப்படுத்தல்களும் **நோய் ஏற்பட்டவர் அல்லது நோய் ஏற்படக்கூடியவரென சந்தேகிக்கப்படக்கூடியவர்** என்பதுடன் கட்டாயமாக தொடர்பினை கொண்டிருக்க வேண்டும். தெளிவாக, தனிமைப்படுத்தல் என்பது சுகாதார முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்பதுடன் தண்டனையாகவோ அல்லது தடுப்பு முறையாகவோ பயன்படுத்தப்படக்கூடாது.
தனிமைப்படுத்தல் நிலையங்களிலான வலிந்து தடுத்துவைக்கும் மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளானவை தன்னிச்சையானதும் சட்டவிரோதமானதும் என்பதுடன் மேற்கூறப்பட்ட நபர்களை பிணையில் விடுவித்த நீதித்துறைக்கு எதிரானதுமாகும். இத்தகைய கைதுகளும் வலிந்த தடுப்புக்களும் எதிரிடையான விளைவை கொண்டுள்ளதுடன் கொவிட்-19 இனுடன் போராட சுகாதார அதிகாரிகளினாலும் பாதுகாப்பு படையினாலும் பொலிஸினாலும் மேற்கொள்ளப்படும் கண்ணியமான முயற்சிகளை தரமிழக்கவும் செய்கின்றன.

அதன்பொருட்டு நாம், போராடுவதற்கான தங்களது அமைதியான உரிமையை செயற்படுத்தும் நபர்களை கைது செய்தல் மற்றும் தடுத்துவைத்தலிலிருந்து விலகியிருக்க தங்களது அதிகாரிகளை நெறிப்படுத்துமாறு பொலிஸ்மா அதிபராகிய தங்களை வேண்டுகிறோம். இதுவரையில் எமக்கு மறுமொழி வழங்கப்படாத, ''கொவிட்-19 நடவடிக்கைகளை தடுக்கும் மற்றும் ஒற்றுமையின்மை, வெறுப்பு போன்றவற்றை தோற்றுவிக்கும் போலி செய்திகள், புகைப்படங்கள், காணொளிகளின் பகிரல் தொடர்பில் பொலிஸின் ஊடக அறிக்கை'' குறித்து 10-06-2021 அன்று இசச தங்களிற்கு எழுதிய கடிதம் குறித்து தாங்கள் அறிந்திருப்பீர்கள். கொவிட்-19 இனின் பரவலை கட்டுப்படுத்தல் எனும் போர்வையில் இலங்கை பொலிசினால் வெளியிடப்படும் ஊடக அறிக்கை மற்றும் சுற்றுநிருபங்களினால் தனிநபர்களது உரிமைகளிலான அதிகரிக்கும் அச்சுறுத்தல் குறித்து இசசமானது எச்சரித்துள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை போன்றே தங்களையும் கருத்துவேறுபாடுகளிற்கான சுதந்திரத்தினை உறையச்செய்யுமாறான விதத்தில் சுகாதார வழியுரைப்புக்களை துஷ்பிரயோகிக்க அனுமதிக்காதிருக்கும் பொருட்டும் ஒழுங்குவிதிகளும் வழியுரைப்புக்களும் கொவிட்-19 தொற்று பரவலிற்கான அபாயமுடையவர்களாக பிரகடனப்படுத்தப்பட்டவர்கள் மீது மாத்திரமே பிரயோகிக்கப்படுதலை உறுதிப்படுத்துவதற்கும் அழைக்கின்றோம்.



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Rajeev Amarasuriya | Rajindh Perera | Pasindu Silva |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

இசசமானது போராட்டக்காரர்களுடன் தொடர்புறும் பொழுது மிகையான அளவில் பொலிஸ் படைகள் பயன்படுத்தப்படுவது குறித்து தனது கரிசனத்தை வெளியிடுவதுடன் மிகையான அளவில் பொலிஸ் படைகள் பயன்படுத்தப்பட்ட முன்னைய எண்ணிலடங்கா சந்தர்ப்பங்களிலும் தனது கரிசனத்தை வெளியிட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள

**ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்**
**தலைவர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**

**ரஜீவ் அமரசூரிய**
**செயலாளர்**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**



President
**Saliya Pieris PC**
Deputy President
**Anura Meddegoda PC**
Secretary
**Rajeev Amarasuriya**
Treasurer
**Rajindh Perera**
Assistant Secretary
**Pasindu Silva**

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk